

# வேம்பு

வேம்பு அல்லது வேப்பமரம் இந்தியாவை (தென்கிழக்கு ஆசியாவின் சில பகுதிகளை) பூர்வீகமாகக் கொண்ட ஒரு மரமாகும். இது விரைவாக வளரக்கூடியதும், தடித்த, வட்டமான கிரீடத்துடனும் காணப்படுகிறது. இது 20 முதல் 30 மீட்டர் உயரம் வரை வளரும். குளிர்காலங்களில் இதன் இலைகள் முழுவதும் உதிர்ந்து, வசந்த காலத்தில் புதிய இலைகளாக முளைக்கின்றன.

நாட்டு மரங்கள் என்பது, பல நூற்றாண்டுகளாக அந்தப் பகுதியில் இயற்கையாகவே வளர்ந்து வரும் மரங்களைக் குறிக்கின்றது. மனிதர்கள் வேறு இடத்திலிருந்து கொண்டு வந்து நடாத மரங்கள் இவை. இவ்வாறான மரங்களுக்கு அதைச் சுற்றிக் காணப்படும் பறவைகள், பூச்சிகள், சிலந்திகள் மற்ற பெரிய விலங்குகளுடன் நெருங்கிய தொடர்பு உண்டு.

ஒரு மரத்தின் கிளைகளையும் இலைகளையும் உள்ளடக்கியதே மரத்தின் கூரைப்பகுதி (Crown). ஒரு மரத்தை கவனமாகப் பார்த்தால் அதன் வடிவத்தை அறிய முடியும்.



### இலைகள்

வேப்பிலைக் கொத்து ஒரு சிறிய காம்பில் இருபுறமும் வளைந்த சிற்றிலைகளால் ஆனது. ஒரு கொத்தில் 20–30 சிறிய இலைகள் இருக்கலாம். இவை கிளைகளின் முனைகளில் கொத்தாக வளர்கின்றன. இலைகள், தண்டுகளுக்கு இடையில் பல பூச்சிகள் வாழ்கின்றன. வேப்ப மரத்தில் தையற்கார எறும்புகள் (Weaver ants) இலைகளை ஒன்றாக இழுத்து, அவற்றின் இளம் எறும்புகளால் (larva) உற்பத்தி செய்யப்படும் பசை போன்ற திரவத்தைக் கொண்டு ஒட்ட வைத்துக் கூடு கட்டுகின்றன.

ஒவ்வொரு சிறிய இலையின் விளிம்பும் அலை அலையாக அல்லது கூர்மையாக (zig zag) இருக்கும். இன்னும் எந்தெந்த செடிகளுக்கு இது போன்ற விளிம்பு உள்ளது?

உங்கள் அருகில் உள்ள வேப்ப மரத்தைப் பாருங்கள் – ஓர் இலையைப் பறித்து, அதனைச் சற்று முகர்ந்தும், பின்பு கொஞ்சம் சுவைத்தும் பாருங்கள். அந்தச் சுவை உங்களுக்கு எதையேனும் நினைவுபடுத்துகிறதா? உங்கள் வீட்டில் வேப்ப இலைகளைப் பயன்படுத்தி இருக்கிறீர்களா? இது குறித்து உங்கள் நண்பர்கள், மற்றும் அக்கம்பக்கத்தில் வசிப்பவர்களிடம், அவர்கள் வேப்ப இலைகளை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்று கேளுங்கள். உங்கள் பற்பசை, சோப்பு அல்லது தலைக்குப் பயன்படுத்தும் எண்ணெய் ஆகியவற்றின் லேபிள்களைப் பாருங்கள் - அவற்றில் எவையேனும் வேம்பை ஒரு மூலப்பொருளாகப் பட்டியலிடுகிறதா?









### மலர்கள்

வேப்பம்பூ சிறியதாகவும் வெண்மையாகவும் மணமுடையதாகவும் இருக்கும். இவை இனிய நறுமணத்துடன் இருப்பதால் கொசுத் தேனீ முதலான பல வகையான தேனீக்களும், எலுமிச்சை அழகி பட்டாம்பூச்சிகளும், அந்துப்பூச்சிகளும் ஈர்க்கப்படுகின்றன. சிலர் இந்த வேப்பம்பூக்களைச் சமையலில் பயன்படுத்துகிறார்கள். உங்களுக்குத் தெரிந்த வேப்பம்பூ பதார்த்தம் எதுவும் உள்ளதா?



### பழங்கள்

வேப்ப மரத்தின் பழங்கள் மென்மையானவையாகவும் நீளமானவையாகவும், பச்சை–மஞ்சள் நிறத்திலும் காணப்படும். பல பறவைகள், குறிப்பாக சின்னான்கள், குக்குறுவான்கள், குயில்கள், வௌவால்கள் இந்தப் பழங்களை விரும்பி உண்கின்றன. ஒரு பழத்தை பிதுக்கி உள்ளே எத்தனை விதைகள் உள்ளன என்பதை எண்ணிப் பாருங்கள்!





### மரப்பட்டை

வேப்ப மரத்தின் பட்டையில் மேடுபள்ளங்களுடன் காணப்படும். அதை உற்றுப் பார்த்தால் சில பூச்சிகள், சிலந்திகள் போன்றவை அதில் ஊர்வதைக் காணலாம். சில சிறிய விலங்குகள், அணில்கள், வெள்ளைக் கண்ணி (Indian White-eye) போன்ற பறவைகள் மரத்தின் கிளைகளில் காணப்படும். ஒரு வெள்ளைத் தாளை எடுத்து மரப்பட்டையின் மேல் வைத்து வண்ணம் திட்டவும். இதில் கிடைக்கும் வடிவத்தை எப்படி விவரிப்பீர்கள்? அந்தப் பட்டையின் தோற்றம் எப்படி உள்ளது?



Illustration and Design: Labonie Roy
Tamil Translation: Sarumathi and P. Jeganathan
This work is licensed to Nature Classrooms under CC BY-NC-SA 4.0.